# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.351/2022 P.W.9

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நூர் முகமது | த-பெ | முகமது காசிம் |
| ஊர்: | : | மன்னார்குடி | | |
| வயது: | : | 65/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | திருவாரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

**எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் மன்னார்குடியில் வசித்து சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். நான் கடந்த 2015 ம் ஆண்டு பள்ளத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்தபோது 05.10.2015 அன்று 13.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது வடகுடியை சார்ந்த முத்தையா என்ற காளிமுத்து என்பவர் மகன் லெட்சுமணன் என்பவர் நிலையத்தில் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று பள்ளத்தூர் காவல் நிலைய குற்ற எண். 187/2015 பிரிவுகள் 279, 337 இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ 4**. பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. அன்றைய தினமே 13.45 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணி மற்றும் நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ 5.** பின்னர் இந்த வழக்கின் காயம் பட்ட நபர் இறந்து விட்டதாக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மேற்படி சட்டப்பிரிவை 304(A) இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை கனம் நீதிமன்றத்தில் சமர்பித்தேன். **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ 6.** பின்னர் மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் கமலக்கண்ணன் என்பவர் வசம் ஒப்படைத்தேன். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. அச்சு முதல் தகவல் அறிக்கை காலம் 15 ல் 05.10.2015 அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கனம் நீதிமன்றத்திற்கு 07.10.2015 அன்று தான் கிடைக்கப்பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். இரண்டு நாட்கள் கால தாமதத்திற்காக காரணங்கள் எதுவும் வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். அச்சு முதல் தகவல் அறிக்கை காலம் 14 ல் புகாரில் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள கடை, வீடு ஆகியவற்றில் உள்ள நபர்களை யாரையும் நான் சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்யான தகவலின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளின் வாக்குமூலங்கள் நானாக பதிவு செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.22 13:18:52 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.